# அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள்

## 1. பாதுகாப்பு விசா என்றால் என்ன?

Protection visas என்பது, தமது தாயகம் திரும்பினால் குறிப்பிடத்தக்க தீங்கு அல்லது துன்புறுத்தலின் உண்மையான வாய்ப்பை எதிர்கொள்ளும் நபர்களுக்கு (அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆனது). உங்களுக்கு Protection visa வழங்கப்பட்டால், உங்கள் குடும்பத்தினர் உங்கள் நாட்டில் வாழ்ந்தாலும் கூட, ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் அனுமதியின்றி நீங்கள் புகலிடம் கோரும் உங்கள் நாட்டிற்குச் செல்ல முடியாது.

நீங்கள் ஊதியம் பெறும் வேலையை காப்பதற்காக, அவுஸ்திரேலியாவில் தங்கியிருப்பதை நீட்டிப்பதற்காக வழிமுறையாக Protection visa ற்கு விண்ணப்பிக்க வேண்டாம்.

நீங்கள் ஒரு Protection visa விற்குத் தகுதியுடையவரா என்பதை அறிய, சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற நீங்கள் வலுவாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.



## 2. ஆஸ்திரேலியாவில் Protection visa விற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் யார்?

தாயகம் திரும்பினால் குறிப்பிடத்தக்க தீங்கு விளைவிக்கும் உண்மையான ஆபத்தை எதிர்கொள்ளும் அல்லது துன்புறுத்தப்படுவதற்கான உண்மையான வாய்ப்பு உள்ள நபர்களுக்கு (அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ) உரியதே பாதுகாப்பு விசாக்கள் ஆகும்.

- இனம்
- மதம்
- தேசியம்
- ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் உறுப்பினர் அல்லது
- அரசியல் கருத்து

தோல்வியுற்ற Protection visa விண்ணப்பங்களே, வெற்றியடைந்த விண்ணப்பங்களை விடக் குறிப்பிடத்தக்க அதிகளவில் உள்ளன. சராசரியாக, அனைத்து விண்ணப்பங்களிலும் 85% க்கும் அதிகமானவை விசா தேவைகளை பூர்த்தி செய்யாததால் மறுக்கப்படுகின்றன. சில தேசிய இனங்களின் விண்ணப்பங்கள் கிட்டத்தட்ட 100% மறுப்பு வீதங்களைக் கொண்டுள்ளன.

உங்கள் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்றய விசாக்கள் இருக்கலாம். சரியான விசாவைக் கண்டறிவது பற்றிய கூடுதல் தகவல்கள் Home Affairs website இல் கிடைக்கின்றன.

## 3. Protection visa விண்ணப்பம் ஒன்றைச் செயலாக்கம் செய்ய எவ்வளவு காலம் ஆகும்?

செயலாக்க நேரத்தை விரைவுபடுத்தப் Protection visa விண்ணப்ப செயல்முறையில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன, பெரும்பாலான புதிய விண்ணப்பங்கள் அண்மைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட 8 மடங்கு வேகமாக முடிவு செய்யப்படுகின்றன. உண்மையான தேவை உள்ளவர்களுக்கு Protection visaளை விரைவாக வழங்குதல் மற்றும் ஆஸ்திரேலியாவில் பணிபுரியவோ அல்லது தங்கியிருப்பதை நீட்டிக்கவோ Protection visa ஒன்றிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு விரைவான மறுப்பளித்தல் என்பதே இதன் பொருளாகும்.

Protection visa ஒன்றிற்கு விண்ணப்பிக்க பதிவு செய்யப்படாத குடிவரவு ஆலோசகரை நீங்கள் ஈடுபடுத்தினால், நீங்கள் பெருந்தொகைப் பணம் செலுத்தலாம் மற்றும் விரைவாகவே Protection visa மறுக்கப்படலாம். நீங்கள் ஒரு Protection visa விற்குத் தகுதியுடையவரா என்பதை அறிய, சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற நீங்கள் வலுவாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

உங்கள் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்ற விசாக்கள் இருக்ககூடும். சரியான விசாவைக் கண்டறிவது பற்றிய கூடுதல் தகவல்கள் உள்நாட்டு அலுவல்கள் திணைக்கள இணையதளத்தில் கிடைக்கின்றன.

## 4. எனது Protection visa மறுக்கப்பட்டால் என்ன நடக்கும்?

உங்களுக்கு Protection visa மறுக்கப்பட்டால், நீங்கள் பெரும்பாலான வேறு விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியாது மேலும் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும். உங்களிடம் செல்லுபடியான விசாவொன்று இல்லையென்றால், நீங்கள் தடுத்து வைக்கப்பட்டு ஆஸ்திரேலியாவில் இருந்து வெளியேற்றப்படலாம். ஒரு Protection visa விண்ணப்பம் மறுக்கப்படின், எதிர்காலத்தில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதை அது கடினமாக்கலாம். நீங்கள் விண்ணப்பிக்கும் விசா வகையைப் பொறுத்து ஆஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ள பிற நாடுகளுக்கான எதிர்கால விசா விண்ணப்பங்களையும் இது பாதிக்கலாம்.

Australian Government

# அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள்

தவறான ஆவணங்களை அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களை Protection visa விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில் வழங்கினால், பாரிய அபராதங்கள், 10 ஆண்டுகள் வரையான சிறை அல்லது இரண்டும் சேர்த்துக் கடுமையான பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம். ஒரு வருகையாளர், மாணவர் அல்லது ஒரு PALM திட்ட (PALM scheme) விசா போன்ற தற்காலிக பணி விசாவில் கூட, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்புவது கடினமாக இருக்கலாம்.

இந்த ஆண்டு, ஆஸ்திரேலிய அரசாங்கம், பாதுகாப்பு விசா மறுக்கப்பட்ட, தற்காலிக விசா காலவதியாகிய விண்ணப்பதாரர்களைக் காவலில் தடுத்து வைப்பதில் மற்றும் அவர்களை ஆஸ்திரேலியாவில் இருந்து அகற்றுவதில் கவனம் செலுத்த ஒரு புதிய நடவடிக்கையைத் தொடங்கியது. இந்த நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நீங்கள் தடுத்து வைக்கப்பட்டு ஆஸ்திரேலியாவில் இருந்து அகற்றப்பட்டால், உங்களை அகற்றுவதற்கான செலவை நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும், அது ஆயிரக்கணக்கான டாலர்களாக இருக்கலாம்.

Protection visa ஒன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு முன், சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற நீங்கள் வலுவாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

## 5. Protection visa மறுக்கப்பட்டால் நான் மற்றொரு விசாவிற்கு விண்ணப்பிக்கலாமா?

உங்களுக்கு Protection visa மறுக்கப்பட்டால், நீங்கள் பெரும்பாலான வேறு விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியாது மேலும் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும். நீங்களும் உங்கள் குடும்ப உறுப்பினர்களும் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்புவது கடினமாக இருக்கலாம்.

Protection visa மறுக்கப்பட்ட பிறகு நீங்கள் தடுத்து வைக்கப்பட்டு ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றப்பட்டால், உங்களை அகற்றுதலுக்கான செலவை நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும், இது ஆயிரக்கணக்கான டாலர்களாக இருக்கலாம்.

ஒரு மறுக்கப்பட்ட Protection visa விண்ணப்பம், நீங்கள் விண்ணப்பிக்கும் விசா வகையைப் பொறுத்து ஆஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ள பிற நாடுகளுக்கான எதிர்கால விசா விண்ணப்பங்களையும் பாதிக்கலாம்.

உங்கள் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்றய விசாக்கள் இருக்கலாம். சரியான விசாவைக் கண்டறிவது பற்றிய கூடுதல் தகவல்கள் Home Affairs website இல் கிடைக்கின்றன.

## 6. Protection visa ஒன்றுக்கு விண்ணப்பிப்பது பற்றி நான் குடிவரவு ஆலோசகரிடம் பேச வேண்டுமா?

Protection visa ஒன்றுக்கு விண்ணப்பிப்பது குறித்த ஆலோசனைகள் பதிவு செய்யப்பட்ட குடிவரவு முகவர்கள் மற்றும் ஆஸ்திரேலிய சட்ட நிபுணர்களிடம் மட்டுமே பெறப்பட வேண்டும். விலக்கு அளிக்கப்பட்ட நபர் ஒருவரிடம் இருந்தும் குடிவரவு உதவியை நீங்கள் பெறலாம்.

விலக்கு அளிக்கப்பட்ட நபர் என்பவர் பதிவு செய்யப்பட்ட குடிவரவு முகவர் அல்லது சட்ட நிபுணர் அல்லாதவர் மற்றும் பின்வருவனவற்றில் ஒருவர்:

- உங்கள் முன்மொழிவாளர் (nominator) அல்லது பணி ஆதரவாளர் (sponsor)
- உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்
- ஒரு பாராளுமன்ற உறுப்பினர்
- தூதரகப் பணிக்குழு உறுப்பினர்
- தூதரகப் பதவியின் உறுப்பினர்
- ஒரு சர்வதேச அமைப்பின் உறுப்பினர்

பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவர் அல்லது ஆஸ்திரேலிய சட்டப் நிபுணர் அல்லாத ஒருவர் அவர்கள் அளிக்கும் உதவிக்காக உங்களிடம் கட்டணம் அறவிடக்கூடாது. விலக்கு பெற்ற நபர் கட்டணம் அறவிடுவது சட்டவிரோதமானது.

பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவர், ஆஸ்திரேலிய சட்ட நிபுணர் அல்லது விலக்கு பெற்ற நபர் அல்லாத ஒருவர், உங்களுக்குத் தவறான ஆலோசனையை வழங்கலாம், இதனால் நீங்கள் ஆஸ்திரேலியாவில் தங்குவதற்கான எந்த வாய்ப்பையும் ஆபத்தில் இடலாம்.

நீங்கள் எதற்காக விண்ணப்பிக்கிறீர்கள் மற்றும் விண்ணப்பத்தில் என்ன தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் உங்களுக்கான Protection visa ஒன்றை விண்ணப்பிக்க எவரையும் அனுமதிக்கக் கூடாது. வேறு எவராயினும் உங்களுக்காக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தாலும், உங்கள் விண்ணப்பத்தில் உள்ள அனைத்தும் உண்மை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

குடிவரவு ஆலோசனைக்கு நீங்கள் பணம் செலுத்துகிறீர்கள் என்றால், அது பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவர் அல்லது ஆஸ்திரேலிய சட்ட நிபுணரால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும். குடிவரவு முகவர் பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பதை, குடிவரவு முகவர்கள் பதிவு அதிகாரசபையின் இணையதளத்தைப் பார்ப்பதன் மூலம் நீங்கள் அறியலாம்.

## 7. எனது Protection visa விண்ணப்பத்திற்கு உதவ ஒரு நற்பெயருள்ள குடிவரவு ஆலோசகரை நான் எவ்வாறு கண்டுபிடிப்பது?

ஆஸ்திரேலியாவில், குடிவரவு முகவர்கள், குடிவரவு முகவர்கள் பதிவு அதிகாரசபையில் (OMARA) பதிவு செய்யப்பட வேண்டும். முகவரொருவர் பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பதைச் சரிபார்க்க அல்லது மாற்று வழியைக் கண்டறிய இணையதளத்தைப் பார்வையிடலாம்.

சட்டத்துக்குப் புறம்பான செயலாற்றுனர்கள் பெரும்பாலும் சமூக ஊடகங்களிலும் இணையவழி அரட்டை குழுக்களிலும் (online chat groups) தங்கள் சேவைகளை விளம்பரப்படுத்துகிறார்கள். Protection visa ஒன்றிற்கு விண்ணப்பிக்கும் போது தவறான தகவல்களை வழங்குமாறு விண்ணப்பதாரர்களிடம் அவர்கள் சில சமயங்களில் கூறுகின்றனர், மேலும் சிலர் இந்தத் தவறான ஆலோசனைக்காக பெருந்தொகைப் பணம் அறவிடுகிறார்கள்.

## அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள்

யாராவது உங்களுக்கு சட்டவிரோத குடிவரவு ஆலோசனையை வழங்க முயற்சித்தால், Border Watch Online Report (பார்டர் வாட்ச் இணையவழிப் புகாரளிப்பு) இனைப் பயன்படுத்தி எங்களிடம் தெரிவிக்கலாம். உங்கள் பெயரை நீங்கள் குறிப்பிட வேண்டியதில்லை.

சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையும் கிடைக்கிறது.



### 8. நான் Protection visa ஒன்றிற்கு விண்ணப்பித்தாலும் நான் என் நாட்டிற்குச் செல்லலாமா?

நீங்கள் Protection visa ஒன்றிற்கு விண்ணப்பிக்கும் போது, நீங்கள் ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பைக் கோரும் நாட்டிற்குப் பயணம் செய்தால், உங்கள் குடும்பம் அங்கு இருந்தாலும், உங்கள் விண்ணப்பம் மறுக்கப்படலாம்.

உங்களுக்கு ஒரு Protection visa வழங்கப்பட்டால், நீங்கள் புகலிடம் கோரிய நாட்டிற்கு உங்கள் குடும்பத்தினர் வசித்தாலும், ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் அனுமதியின்றி நீங்கள் அங்கு செல்ல முடியாது.

### 9. ஒரு Protection visa விண்ணப்பத்தில் தவறான தகவலைச் சமர்ப்பித்தால் என்ன நடக்கும்?

தவறான ஆவணங்களை அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களை Protection visa விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில் வழங்கினால், பாரிய அபராதங்கள், 10 ஆண்டுகள் வரையான சிறை அல்லது இரண்டும் சேர்த்துக் கடுமையான பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம்.

அபராதம் மற்றும் சிறைத்தண்டனை கிடைப்பதற்கான ஆபத்துடன், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஆஸ்திரேலியாவுக்கு திரும்புவது கடினமாக இருக்கலாம், அலுவல்கள், மாணவர் அல்லது PALM திட்ட (PALM scheme) விசா போன்ற தற்காலிக வேலை விசாவில் கூட.

உங்கள் விசா வழங்கப்பட்ட பிறகு நீங்கள் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவலைக் கொடுத்திருப்பது கண்டறியப்பட்டால், உங்கள் Protection visa இரத்து செய்யப்படலாம். நீங்கள் விண்ணப்பிக்கும் விசா வகையைப் பொறுத்து, மறுக்கப்பட்ட Protection visa விண்ணப்பம் அல்லது இரத்துசெய்யப்பட்ட Protection visa, ஆஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ள பிற நாடுகளுக்கான எதிர்கால விசா விண்ணப்பங்களையும் பாதிக்கலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.

Protection visa ஒன்றிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர், அவர்களுக்கான ஆதரவுக் கடிதம் ஒன்றை எழுதுமாறு கோரினால், அவர்கள் உண்மையான புகலிடக் கோரிக்கையாளர் என்று நீங்கள் நம்பினால் மட்டுமே இதைச் செய்ய வேண்டும். அவர்களின் மாநிலம் அல்லது ஆள்புலத்தில் உள்ள சிறப்பு அகதி மற்றும் குடிவரவு சட்ட வழங்குநரிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற அவர்களை ஊக்குவிக்கவும்.

### 10. ஆஸ்திரேலியாவில் தங்குவதற்கும் வேலை செய்வதற்கும் Protection visa ஒரு வழியைத் தருகிறது என்பது உண்மையா?

தாயகம் திரும்பினால், குறிப்பிடத்தக்க தீங்கு அல்லது துன்புறுத்தலின் உண்மையான வாய்ப்பை எதிர்கொள்ளும் ஒருவர் மட்டுமே, Protection visa ஒன்றிற்கு விண்ணப்பிக்க வேண்டும். Protection visa என்பது ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கானது அல்ல.

சில வணிகங்கள் ஆஸ்திரேலியாவில் வேலை வாய்ப்புகளை வழங்கலாம், தற்காலிக விசா வைத்திருப்பவர்களை தவறான தகவல்களைப் பயன்படுத்தி Protection visa ஒன்றிற்கு விண்ணப்பிக்கச் சொல்லலாம், இதனால் விண்ணப்பதாரருக்கு விசா மறுக்கப்படும் அபாயம் உள்ளது மற்றும் அவர்களுக்கு பாரிய அபராதம், 10 ஆண்டுகள் வரை சிறை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். எதிர்காலத்தில் அவர்களுக்கு மற்ற விசாக்களும் மறுக்கப்படலாம்.

தவறான தகவல்களைப் பயன்படுத்திப் Protection visa இற்கு விண்ணப்பித்து ஆஸ்திரேலியாவில் தங்குவதைத் தொடருமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. தவறான தகவலை வழங்கினால், விண்ணப்பதாரரின் விசா மறுக்கப்படும் அபாயம் உள்ளது, மேலும் அவர்கள் பாரிய அபராதம், 10 ஆண்டுகள் வரை சிறை, அல்லது இரண்டையும் பெற நேரிடும்.

தோல்வியுற்ற Protection visa விண்ணப்பங்களே, வெற்றியடைந்த விண்ணப்பங்களை விடக் குறிப்பிடத்தக்க அதிகளவில் உள்ளன. சராசரியாக, அனைத்து விண்ணப்பங்களிலும் 85% இற்கும் அதிகமானவை விசா தேவைகளை பூர்த்தி செய்யாததால் மறுக்கப்படுகின்றன. சில தேசிய இனங்களின் விண்ணப்பங்கள் கிட்டத்தட்ட 100% மறுப்பு வீதங்களைக் கொண்டுள்ளன.

நீங்கள் ஒரு Protection visa இற்கு விண்ணப்பிப்பதைக் கருத்தில் கொண்டால், நீங்கள் தகுதியானவரா என்பதைக் கண்டறிய, சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற நீங்கள் வலுவாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள். உங்கள் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்ற விசாக்கள் இருக்கலாம்.

### 11. இலவச ஆலோசனைக்காக நான் எவரிடமாவது பேச முடியுமா?

ஆஸ்திரேலிய அரசாங்கம் சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கி வருகிறது, அவர்கள் குறித்த நபர்கள் Protection visa இற்குத் தகுதியுடையவர்களா என்பதை புரிந்துகொள்ள உதவுகிறார்கள்.

**மேலும் தகவல்களை அறிய நீங்கள் உள்நாட்டு வருகையாளர் இணையதளத்திற்கும் செல்லலாம்.**

Australian Government